**செய்தி வெளியீடு எண்:518** **நாள்: 08.08.2017**

## விழுப்புரம் மாவட்டத்தில் 9.8.2017 அன்று பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பங்கேற்பு

புரட்சித் தலைவரின் எண்ணம், குறிக்கோள் மற்றும் செயல் அனைத்தும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்காகவே இருந்தது. அவருடைய வழியை பின்பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்த்தார்கள்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவைபோற்றும் வகையிலும், அவர் ஆற்றிய பணிகள், அவர் பெற்ற புகழ்கள் இன்றைய இளைஞர்கள் மற்றும் வருங்கால சந்ததியினர் அறிந்திடும் வகையில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா தமிழக அரசின் சார்பில் மிக சிறப்பாக அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அதன் தொடக்க விழா 30.6.2017 அன்று மதுரையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் 22.7.2017 அன்றும், அதற்கடுத்ததாக திருவண்ணாமலை மாவட்டத்தில் 29.7.2017 அன்றும், 5.8.2017 அன்று பெரம்பலூர் மாவட்டத்திலும் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்தும், அரசின் பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா தொடர்பாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தார்கள்.

அதன்படி 9.8.2017 பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா விழுப்புரம் மாவட்டத்தில் மிக சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. இதனை தொடர்ந்து, 16.8.2017 அன்று கடலூர் மாவட்டத்திலும், 19.8.2017 அன்று திருவாரூர் மாவட்டத்திலும், 23.8.2017 அன்று அரியலூர் மாவட்டத்திலும், 30.8.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்திலும் மிக சிறப்புடன் நடைபெற உள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நடைபெறும் மாவட்டங்களில் பள்ளி மாணவ–மாணவியரிடையே கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படும். எம்.ஜி.ஆரின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சியும் அமைக்கப்படும். மேலும் எம்.ஜி.ஆர். பற்றிய குறும்படமும், அவர் நடித்த திரைப்படங்களும் கிராமங்களில் மின்னணு திரை மூலம் திரையிடப்பட்டு வருகின்றன.

விழுப்புரம் மாவட்டம் கண்டமானடியில் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா 9.8.2017 அன்று மிக சிறப்பாக நடைபெற உள்ளது. இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் தலைமை வகிப்பார்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் முன்னிலை வகிப்பார்கள். மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் மு.தம்பிதுரை அவர்கள் சிறப்புரை ஆற்றுவார்கள்.

..2

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து 5.52 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்தும் 858.52 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் 41,248 பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரை ஆற்றுவார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டப் பேரவை துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி புதுடெல்லி மற்றும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் பங்கேற்று சிறப்பிப்பார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றுவார்கள். விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றுவார்கள்.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விழா நடைபெறும் நாள் அன்று பிற்பகல் 4 மணியளவில் புரட்சித் தலைவர் புகழ் பாடும் இன்னிசை நிகழ்ச்சி மற்றும் கலைநிகழ்ச்சி நடைபெறும். இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், விழுப்புரம் மாவட்ட நிர்வாகம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*****

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**